# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# பத்தாம் பத்து

## மூன்றாம் திருமொழி - ஏத்துகின்றோம்
## இராமாவதாரத்தில் ஈடுபாடு 2
## [இராமனிடம் தோல்வியுற்ற அரக்கர் அபயம் வேண்டிக் கூத்தாடுதல்]

** ஏத்துகின்றோம் நாத்தழும்ப * இராமன் திருநாமம் *
சோத்தம் நம்பீ! சுக்கிரீவா! * உம்மைத் தொழுகின்றோம் **
வார்த்தை பேசீர் எம்மை * உங்கள் வானரம் கொல்லாமே *
கூத்தர் போல ஆடுகின்றோம் * குழமணி தூரமே 1

எம்பிரானே! என்னை ஆள்வாய்! * என்றென்று அலற்றாதே *
அம்பின் வாய்ப்பட்டு ஆற்றகில்லாது * இந்திரசித்து அழிந்தான் **
நம்பி அனுமா! சுக்கிரீவா! * அங்கதனே! நளனே! *
கும்பகர்ணன் பட்டுப் போனான் * குழமணி தூரமே 2

ஞாலம் ஆளும் உங்கள் கோமான் * எங்கள் இராவணற்கு *
காலன் ஆகி வந்தவா! கண்டு * அஞ்சிக் கருமுகில் போல் **
நீலன் வாழ்க சுடேணன் வாழ்க * அங்கதன் வாழ்க என்று *
கோலம் ஆக ஆடுகின்றோம் * குழமணி தூரமே 3

மணங்கள் நாறும் வார் குழலார் * மாதர்கள் ஆதரத்தை *
புணர்ந்த சிந்தைப் புன்மையாளன் * பொன்ற வரி சிலையால் **
கணங்கள் உண்ண வாளி ஆண்ட * காவலனுக்கு இளையோன் *
குணங்கள் பாடி ஆடுகின்றோம் * குழமணி தூரமே 4

வென்றி தந்தோம் மானம் வேண்டோம் * தானம் எமக்காக *
இன்று தம்மின் எங்கள் வாணாள் * எம்பெருமான் தமர்காள்! **
நின்று காணீர் கண்கள் ஆர * நீர் எம்மைக் கொல்லாதே *
குன்று போல ஆடுகின்றோம் * குழமணி தூரமே 5

கல்லின் முந்நீர் மாற்றி வந்து * காவல் கடந்து * இலங்கை
அல்லல் செய்தான் உங்கள் கோமான் * எம்மை அமர்க்களத்து **
வெல்லகில்லாது அஞ்சினோம் காண் * வெங்கதிரோன் சிறுவா! *
கொல்ல வேண்டா ஆடுகின்றோம் * குழமணி தூரமே 6

மாற்றம் ஆவது இத்தனையே * வம்மின் அரக்கர் உள்ளீர்! *
சீற்றம் நும்மேல் தீர வேண்டில் * சேவகம் பேசாதே **
ஆற்றல் சான்ற தொல் பிறப்பில் * அனுமனை வாழ்க என்று *
கூற்றம் அன்னார் காண ஆடீர் * குழமணி தூரமே 7

கவள யானை பாய் புரவி * தேரோடு அரக்கர் எல்லாம்
துவள * வென்ற வென்றியாளன் * தன் தமர் கொல்லாமே **
தவள மாட நீடு அயோத்தி * காவலன் தன் சிறுவன் *
குவளை வண்ணன் காண ஆடீர் * குழமணி தூரமே 8

ஏடொத்த ஏந்தும் நீளிலை வேல் * எங்கள் இராவணனார்
ஓடிப் போனார் * நாங்கள் எய்த்தோம் * உய்வதோர் காரணத்தால் **
சூடிப் போந்தோம் உங்கள் கோமன் ஆணை * தொடரேன்மின் *
கூடிக் கூடி ஆடுகின்றோம் * குழமணி தூரமே 9

** வென்ற தொல் சீர்த் தென்னிலங்கை * வெஞ்சமத்து * அன்று அரக்கர்
குன்றம் அன்னார் ஆடி உய்ந்த * குழமணி தூரத்தை **
கன்றி நெய்ந்நீர் நின்ற வேற்கைக் * கலியன் ஒலி மாலை *
ஒன்றும் ஒன்றும் ஐந்தும் மூன்றும் * பாடி நின்று ஆடுமினே 10

**அடிவரவு:** ஏத்துகின்றோம் எம்பிரானே ஞாலம் மணங்கள் வென்றி கல்லின் மாற்றம் கவளம் ஏடு வென்ற சந்தம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---